# நீரிழிவு விழித்திரை ககி ஒளி உறைவு (ரெட்டினோபதிக்கான லேசர் ஃபோட்டோகோகுலேசன் ) மருத்துவம்.

## நோயாளியின் தரவு

நோயாளியின் பெயர் ................................ வயது/பாலினம்....................................

நோயாளியின்அடையாளம்: ....................தேதி ................... மகன் / மகள்...........

முகவரி..............................................தொலைபேசி.........................................................

எனது வலது/இடது கண்ணில் நீரிழிவு விழித்திரை நோய்க்கான சீரொளி (லேசர்) சிகிச்சையை செய்ய நான் டாக்டர்.........................................................ஐ அங்கீகரிக்கிறேன்.

இந்த ஆவணம் உங்களுக்கு நீரிழிவு விழித்திரை நோய்க்கான சீரொளி (லேசர்) சிகிச்சையைப் பற்றிய தகவல்களை வழங்கும். இதன் மூலம் சீரொளி (லேசர்) சிகிச்சையை செய்துகொள்ளலாமா என்பதை நீங்கள் தீர்மானிக்க முடியும்.

கண் மருத்துவர் இந்த சீரொளி (லேசர்) சிகிச்சையை செய்வதற்கு முன், இந்த சிகிச்சையைப்பற்றி உங்களது கேள்விகளை கேட்க உங்களுக்கு உரிமை உண்டு.

நீரிழிவு நோயின் விழித்திரைபாதிப்பிற்கான சீரொளி சிகிச்சைக்கு அறிகுறிகள்

கண் ஒரு கேமராவைப் போல செயல்படுகிறது. கண்ணின் முன்புறம் உள்ள திசுக்கள், புகைப்படக்கருவியில் உள்ள லென்ஸ் மற்றும் ஷட்டர் ஐ போல, ஒளிக்கதிர்களை மையப்படுத்தியும், அளவைக் கட்டுப்படுத்தியும் செயல்படுகின்றன. கண்ணின் பின்புறம் உள்ள விழித்திரையானது, புகைப்படக்கருவியில் உள்ள பிலிம் போல செயல்பட்டு ஒளியை பெற்று மூளைக்கு அனுப்புகிறது. விழித்திரை இயல்பாக செயல்படவில்லையென்றால், பார்வை சீராக இருக்காது.

சீரொளி சிகிச்சையானது, விழித்திரையில் உள்ள அசாதாரணமான, கசியும் இரத்த நாளங்களை மூடுவதற்கு அல்லது அழிக்க லேசரின் வெப்பத்தைப் பயன்படுத்துகிறது. இரண்டு அணுகுமுறைகளில் உள்ளன. அவற்றில் இரண்டையும் அல்லது ஒன்றை நீரிழிவு நோயின் விழித்திரைபாதிப்பிற்கு பயன்படுத்தப்படலாம்:

• மையப்பகுதிக்கான குவிய சீரொளி சிகிச்சை: விழித்திரையின் மாகுலா பகுதியில், உள்ள நீர் அல்லது இரத்த கசிவை கட்டுப்படுத்தவும், இரத்த நாளங்களை மூடுவதற்கும் குவிய சிகிச்சை பயன்படுத்தப்படுகிறது. கண் மருத்துவர் சிகிச்சைக்காக, கசிந்துகொண்டிருக்கும் இரத்த நாளங்களைக் கண்டறிந்து, குறைந்த எண்ணிக்கையிலான லேசர் தீக்காயங்களை பயன்படுத்தி அடைக்க முயற்சிப்பர்.

• சிதறல் (முழு விழித்திரை) சீரொளி சிகிச்சை: விழித்திரையின் பரந்த பகுதியில் உருவாகியுள்ள புதிய அசாதாரண இரத்த நாளங்களின் வளர்ச்சியை கட்டுப்படுத்த சிதறல் சிகிச்சை பயன்படுத்தப்படுகிறது. கண் மருத்துவர் இரத்தத்தை நிறுத்த விழித்திரையில் நூற்றுக்கணக்கான லேசர் எரிப்புகளை செய்யலாம். ஒரு நபருக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட முறை இந்த சிகிச்சை தேவைப்படலாம்.

சீரொளி சிகிச்சை பொதுவாக அதிக வலி தருவதில்லை. மயக்கமருந்து ஊசி போடுவது சற்று அசௌகரியத்தை உண்டாகும். சீரொளி சிகிச்சையின் பொழுது, பலமான ஒளியின் காரணமாக, கண்ணில் கூச்ச உணர்வு ஏற்படலாம்.

நீரிழிவு நோயின் விழித்திரைபதிக்கிற்கான சீரொளி சிகிச்சையில் சாத்தியமான நன்மைகள்

சீரொளி சிகிச்சையானது ஏற்கனவே இழந்த பார்வையை மீட்டெடுக்காது. ஆனால் சரியான நேரத்தில் செயல்படுத்தும்போது:

- குறிப்பிட்ட இரத்த நாளங்களை குறிவைக்கும் குவிய சீரொளி சிகிச்சை, மாகுலாவில் வீக்கம் உள்ள நபர்களுக்கு, தங்களின் பார்வை இழப்பு அபாயத்தைக் குறைப்பதில் பயனுள்ளதாக இருக்கும். இது மிதமான பார்வை இழப்பு அபாயத்தை 20% குறைக்கிறது. மேலும் விழித்திரைநோய் அடுத்த கட்டத்திற்கு முன்னேறுவதைத் தடுக்கவும் உதவுகிறது.

- விழித்திரையின் பரந்த பகுதிக்கு சிகிச்சை அளிக்கும் சிதறல் (முழு விழித்திரை) சீரொளி சிகிச்சை : பார்வை இழக்கும் அபாயம் அதிகம் உள்ள நபர்களுக்கு இந்த சிகிச்சை, அடுத்த 6 ஆண்டுகளில், கடுமையான பார்வை இழப்புக்கான ஆபத்தை 50% முதல் 60% வரை குறைக்கிறது. தற்போது புதிய இரத்தநாளங்கள் இல்லாத கண்களிலும், புதிய இரத்தநாளங்கள் லேசாக உள்ள கண்களிலும், இந்த சிகிச்சை தீவிர நோய் தாக்கத்தை 50% வரை குறைகிறது. மருத்துவ ஆய்வுகளில், "சட்டப்படி பார்வை இழந்தவர்", என்ற அளவிற்கு கண் பார்வை குறைவதை இந்த சிகிச்சை 90% வரை தடுக்கிறது.

நீரிழிவு நோயின் விழித்திரைபதிக்கிற்கான சீரொளி சிகிச்சையில் சாத்தியமான சிக்கல்களும் பக்க விளைவுகளும்:

சீரொளி சிகிச்சையில் விழித்திரையின் ஒரு பகுதியை எரித்து அழிக்கிறோம். இதனால் ஒரு அளவிற்கு நிரந்தர பார்வை இழப்பு ஏற்படுத்துகிறது. இது தவிர்க்க முடியாத ஒன்றாகும். மையப் பார்வை லேசாக குறைவது, இரவு பார்வை குறைவது, பக்கவாட்டு பார்வை குறைவது மற்றும் கூர்ந்து பார்க்கும் திறன் குறைவது ஆகியவை ஏற்படலாம். இருப்பினும், சீரொளி சிகிச்சையால் ஏற்படும் மேற்கூறிய பார்வை இழப்பு, சிகிச்சையளிக்கப்படாத நீரிழிவு நோயின் விழித்திரைபாதிப்பினால் ஏற்படும் பார்வை இழப்பை ஒப்பிடும்போது, லேசானது.

சீரொளி சிகிச்சையின் அரிதான சிக்கல்கள் கடுமையான பார்வை இழப்பை ஏற்படுத்தலாம். இவை அடங்கும்:

• கண்ணில் உள் இரத்தப்போக்கு (விட்ரஸ் ஹெமரேஜ்).

• இழுக்கப்பட்டு விழித்திரை பிரிவது.

• எதிர்பாராமல், கண் விழித்திரையின் மையப்பகுதியில் சீரொளி பட்டு, மெய்யப்பபார்வை முற்றிலுமாக குறைவது.

இந்த சீரொளி (லேசர் / LASER) சிகிச்சையின் தன்மை மற்றும் நோக்கம், இதில் உள்ள அபாயங்கள், மாற்று வழிகள் மற்றும் சாத்தியமான சிக்கல்கள் என் மருத்துவரால் எனக்கு விளக்கப்பட்டது. எனது எல்லா கேள்விகளும் கேட்க வாய்ப்பளிக்கப்பட்டது, அவைகளுக்கு திருப்திகரமாக பதிலளிக்கப்பட்டுள்ளன. இதில் கண்டிப்பாக பார்வை முன்னேறும் எனவோ, கண் பார்வை இழப்பை கண்டிப்பாக தடுக்கலாம் என்றோ, கண்டிப்பாக பலன் கிடைக்கும் எனவோ யாரும் உறுதியளிக்கவில்லை. இவை அனைத்தும் எனக்கு புரியும் மொழியில் விளக்கப்பட்டுள்ளது.

## மருத்துவரின் பிரகடனம்

செய்யவிருக்கும் சீரொளி (லேசர் / LASER) சிகிச்சை தன்மை, எதிர்பார்க்கப்படும் விளைவுகளை மற்றும் அதன் அபாயங்களை நோயாளியிடம் தெளிவாக விளக்கியுள்ளேன் என்று உறுதியளிக்கிறேன்.

நான் நோயாளிக்கு சந்தேகங்களையும் கேள்விகளையும் கேட்க வாய்ப்பு கொடுத்துள்ளேன். அவற்றிற்கு நான் அவருக்கு புரியும்படி திருப்தியான பதில்களும் அளித்துள்ளேன்.

மருத்துவரின் கையெழுத்து ..................................................................

மருத்துவரின் பெயர் ..................................................................

தேதி ..................................................................

| | |
|---|---|
| சாட்சி 1 | சாட்சி 2 |
| கையொப்பம்: .................................... | கையொப்பம்:...................................... |
| பெயர்:..................................................... | பெயர்:.................................................... |
| முகவரி:.................................................. | முகவரி: ............................................... |
| தொலைபேசி ..................................... | தொலைபேசி: .................................... |
| கைபேசி.................................................. | கைபேசி ............................................... |